இணைப்பு I

[39 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

விவர அறிக்கை.

பாம்பன் பால வேலை, ஒப்பந்தக்காரர் திருவாளர்கள் நிலகண்டன் அண்டு பிரதர்ஸ், சென்னை, அவர்களுக்கு ஒப்பந்தத் தொகை ரூபாய் 513.08 இலட்சங்கள் செலவில் கட்டி முடிக்க, 10—10—1974 அன்று ஒப்பந்தமாகி, 17—11—1974 அன்று பால வேலை துவக்கப்பட்டது. ஒப்பந்தப்படி, பால வேலைகள் அனைத்தும் 16—11—1978 அன்றே முடிவடைந்திருக்க வேண்டும்.

2. வேலையின் முன்னேற்றம் தடைபட்டதற்கு ஒப்பந்தக்காரர்கள் திறமையுடன் செயல்பட தொடர்ந்து தவறியதே ஆகும். இதனால் முழு வேலையையும் முடிக்க வேண்டிய காலமான 16—11—1978 அன்று 32 சதவிகித அளவிற்கே வேலையில் முன்னேற்றம் ஏற்பட்டது.

3. வேலையை முடிப்பதற்காக ஒப்பந்தக்காரர்கள் 31—12—1980 வரை கால நீட்டிப்பு அளிக்கும்படி கோரினர். அவர்களுக்கு நான்கு தருணங்களில் 31—10—1979, 31—12—1979, 31—3—1980 மற்றும் 30—6—1980 வரை கால நீட்டிப்பு அளிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் எந்தவொரு வேலையையும் செய்து முடிக்கவில்லை. கடைசியாக அவர்களுக்கு 30—9—1980 வரை கால நீட்டிப்பு அளிக்கப்பட்டது. இது தவிர அவர்கள் வேலையின் முன்னேற்றத்தை தாமதப்படுத்தி கடைசியில் ஜூலை 79-ல் 36 சதவிகித அளவிற்கு வேலைகள் செய்த நிலையில் எல்லா வேலைகளையும் நிறுத்தி விட்டனர். ஒப்பந்தக்காரர்கள் ஜூலை 79 வரை செய்து முடித்த வேலைகளின் மதிப்பு ரூபாய் 221.33 இலட்சங்களாகும்.

4. பாம்பன் பகுதியில் 24—11—1978 அன்று வீசிய புயலினால் ஒப்பந்தக்காரர்களின் தற்காலிக கட்டுமானங்களாகிய மரப்பாலம், மற்றும் இதர தளவாடங்களும் சேதத்திற்கு உள்ளாகியது. இப்புயலை விதிவிலக்குள்ள இடை Excepted risks) என்று கூறி ஒப்பந்தக்காரர்கள் நஷ்டஈடாக முதலில் மதிப்பிறக்கத் தொகையாக (Depreciated loss) ரூ. 20.66 இலட்சங்களும் மற்றும் தொகையாக குறிப்பிடாத புயல் காரணமாக அவர்களுக்கு ஏற்படும் செயல் அமைப்புச் செலவு, தொழிலாளர்களை மீண்டும் அமைக்கும் வகையில் ஏற்படும் செலவு ஆகியவைகளுக்காகவும் கோரி மனு செய்தார்கள். இது பரிசீலனையில் இருந்துகொண்டு இருக்கும்போது, 8—11—1979 அன்று வானியல் துறையிடமிருந்து ஓர் அறிக்கை கிடைக்கப்

1981 பிப்ரவரி 26]

பெற்றது என்றும், இதன்படி நவம்பர் 78-ல் ஏற்பட்ட புயல், டிசம்பர் 64-ல் ஏற்பட்ட புயலுடன் ஒப்பிட்டு நோக்குங்கால் இதற்கு முன் நிகழ்ந்திராத வகையில் இல்லை என்பது தெரியவந்தது என்றும் தலைமைப் பொறியாளர் தெரிவித்தார். இந்த அறிக்கையின்படி விதி விலக்குள்ள இடையூறு (Excepted risks) ஏற்படாததால் நிலைமை முழுமையாக மாறிவிட்டது. அதன்படி ஒப்பந்தக்காரர்களின் நஷ்ட ஈட்டுக் கோரிக்கை ஒத்துக்கொள்ளும் வகையில் இல்லை என்று தலைமைப் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டது. இப்பிரச்சினை பல கட்டங்களிலும், பல மட்டங்களிலும் வெவ்வேறு காலங்களிலும் முழுமையாக ஆராயப்பட்டது.

5. அதன் முடிவாக ஒப்பந்தக்காரர்களுக்கும், பாம்பன் பாலத் திட்டத் துறைக்கும் இடையேயுள்ள தகராறு அல்லது கருத்து வேற்றுமை குறித்து ஒப்பந்த விதிகளின்படி நடக்குமாறு ஒப்பந்தக்காரர்களுக்கு அரசால் தெரிவிக்கப்பட்டது.

6. ஒப்பந்த விதிகளை மதிப்பது குறித்து ஒப்பந்தக்காரர்கள், தங்கள் கடமையை நிறைவேற்றும்படி நடவடிக்கை எடுக்குமாறும், மீதமுள்ள பணிகளை விரைவில் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் பாம்பன் பாலத் திட்ட தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

7. ஒப்பந்தக்காரர்கள், பாம்பன் பாலத் திட்ட இரண்டாம் செயற் கோட்டம், கோட்டப் பொறியாளரின் அறிவிப்பில் உள்ள கோரிக்கைக்கு உட்பட்டு நடக்கத் தவறியதால், கோட்டப் பொறியாளர் 29—12—1980 அன்று ஒப்பந்தத்தை முழுமையாக ரத்து செய்துள்ளார்.

8. ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மீதி வேலைகளை செயல்படுத்த ஒப்படைப்பதற்கும் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கிடையில் ஒப்பந்தக்காரர்கள் நடுவினரை மாற்றக் கோரி உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்துள்ளனர். ஆகவே இவ்விஷயம் வழக்காடு மன்றத்தின் முன் உள்ளது.